தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1979 பிப்ரவரி 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள் — விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தென்னாற்காடு மாவட்டத்தில் புதிய காவல் நிலையங்கள்.

* வினா எண். 120. அ— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி வட்டம் வல்லத்தில் ஒரு வெளிப்புற (out-post) காவல் நிலையமும், சத்திய மங்கலத்தில் உள்ள வெளிப்புற (out-post) காவல் நிலையத்தை காவல் நிலையமாகவும் மாற்றும் செயற்குறிப்புகள் அரசிடம் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

முத்துராமலிங்கத்தேவர் நினைவுத் தபால் தலை

* வினா எண். 120 ஆ— திரு. டி. பி. எம். பெரியசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு நினைவும் தபால் தலை வெளியிட மத்திய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்யுமா ?